# என்ன ஆதரவு கிடைக்கிறது, எங்கு உதவி பெறலாம்

**உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால், 111 ஐத் தொடர்புகொள்ளவும்.**

சமீபத்திய புதுப்பிப்புகளுக்கு, www.civildefence.govt.nz ஐப் பார்வையிடவும், மேலும் உங்கள் உள்ளூர் சிவில் பாதுகாப்பு அவசரநிலை மேலாண்மை குழுவை ஆன்லைனிலும் சமூக ஊடகங்களிலும் பின்தொடரவும்.

## உள்ளடக்கம்


- வெளியேற்றம் மற்றும் தங்குமிடம்
- போக்குவரத்து மற்றும் பயணம்
- நிதி ஆதரவு
- ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு
- ஊனமுற்றோருக்கான ஆதரவு
- வானாவ் மாவோரி *(Whānau Māori)* க்கான ஆதரவு
- பசிபிக் மக்களுக்கான ஆதரவு
- இன சமூகங்களுக்கான ஆதரவு
- வெளிநாட்டினர்
- விலங்கு நல்வாழ்வு
- காப்பீடு
- குத்தகைதாரர்கள் மற்றும் வீட்டு உரிமையாளர்கள்
- பள்ளிகள் மற்றும் குழந்தை பருவ கல்வி மையங்கள்


## வெளியேற்றம் மற்றும் தங்குமிடம்

### வெளியேற்றம்

நீங்கள் வெளியேற வேண்டியிருந்தால், உங்களால் முடிந்தால், தயவுசெய்து நண்பர்கள் அல்லது வனாவ் *(whānau)* /குடும்பத்தினரிடம் செல்லவும்.

உங்களால் வனாவ் *(whānau)/*குடும்பத்தினருடன் தங்க முடியாவிட்டால், நீங்கள் ஒரு சிவில் பாதுகாப்பு மையத்திற்கு வெளியேறலாம். சிவில் பாதுகாப்பு மையங்களின் திறந்த நிலை பட்டியலுக்கு உங்கள் உள்ளூர் சிவில் பாதுகாப்பு அவசரநிலை மேலாண்மைக் குழுவின் வலைதளத்திற்கு செல்லுங்கள்.

உங்களுக்குத் தேவையான எந்த அத்தியாவசியப் பொருட்களையும் எடுத்துக் கொள்ளுங்கள். மருந்துகள், சூடான ஆடைகள் மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள் உட்பட.

உங்களிடம் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி நாய் இருந்தால், அதை உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்.

உங்களால் சிவில் பாதுகாப்பு மையத்தை நாட முடியவில்லை என்றால் உங்களின் விருப்பத்தேர்வுகளை பற்றி விவாதிக்க தயவு செய்து உங்கள் உள்ளூர் சிவில் பாதுகாப்பு அவசரநிலை நிர்வாக குழுவை தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் சிவில் பாதுகாப்பு அவசரநிலை மேலாண்மைக் குழுவை இங்கே கண்டறியவும் www.civildefence.govt.nz/find-your-civil-defence-group/.

## போக்குவரத்து மற்றும் பயணம்

### சாலைப் பயணம்

உங்கள் சிவில் பாதுகாப்பு குழு மற்றும் உள்ளூர் அதிகாரிகளின் ஆலோசனையைப் பின்பற்றவும்.

போக்குவரத்து மற்றும் பயணத் தகவல்களுக்கு சமூக ஊடகங்களில் NZ போக்குவரத்து நிறுவனத்தைப் பின்தொடரவும் அல்லது www.nzta.govt.nz/traffic-and-travel-information/ என்ற வலைதளத்தை பார்வையிடவும்

www.journeys.nzta.govt.nz/journey-planner/ வலைதளத்தில் உங்கள் பயணத்தைத் திட்டமிட NZ போக்குவரத்து நிறுவனத்தின் பயணத் திட்டமிடுநரை பயன்படுத்தவும்

# நிதி ஆதரவு

## நிதி உதவி

உங்கள் அத்தியாவசிய செலவுகளைச் சமாளிக்க நீங்கள் சிரமப்பட்டால், ஒர்க் அண்ட் இன்கம் உங்களுக்கு உதவக்கூடும். நீங்கள் வேலை செய்து கொண்டிருந்தாலும் கூட.

ஒவ்வொருவரின் சூழ்நிலையும் வேறு. ஒர்க் அண்ட் இன்கம் பின்வருபவை போன்றவற்றிற்கு பணம் செலுத்த உங்களுக்கு உதவக்கூடும்:

- படுக்கை வசதி,
- உணவு,
- வாடகை,
- மின் கட்டணங்கள்,
- பழுது பார்ப்புகள், அல்லது
- சாதனங்கள் மாற்றம்

நீங்கள் என்ன பெற முடியும், அதை திருப்பிச் செலுத்த வேண்டுமா என்பது உங்கள் சூழ்நிலையைப் பொறுத்தது.

மேலும் தகவலுக்கு www.workandincome.govt.nz ஐப் பார்வையிடவும் அல்லது 0800 559 009 என்ற எண்ணை அழைக்கவும்.

## வங்கி நிதி உதவி

நீங்கள் அவசரநிலை காரணங்களால் பண நெருக்கடியைச் சந்தித்தால், தாமதிக்காமல் உங்கள் வங்கியை அணுகுங்கள்.

நிதி நெருக்கடியில் உள்ளவர்களுக்கு உதவுவதற்கு வங்கிகளில் தனிப்பிரிவுக் குழுக்கள் உள்ளன; அவர்கள் உங்கள் சூழலுக்கு ஏற்ற தீர்வுகளைப் பற்றி ஆலோசிப்பார்கள்.

உங்கள் சூழ்நிலையைப் பொறுத்து, வங்கிகளால் பல்வேறு வகைகளில் உங்களுக்கு உதவ முடியும். இவை பின்வருவனவற்றை உள்ளடக்கியது:

- குறுகிய காலத்திற்கு அசல் தொகையைத் தவிர்த்து, வட்டியை மட்டும் செலுத்தும் முறை, மற்றும்
- வைப்புத் தொகையை முன்கூட்டியே திரும்பப் பெறுவதற்கான அபராதக் கட்டணத்தைத் தள்ளுபடி செய்தல்.

ஒவ்வொருவரின் சூழ்நிலையும் மாறுபடும். தாமதிக்காமல் உங்கள் வங்கியிடம் ஆலோசியுங்கள்; அதுவே அவர்கள் உங்களுக்குச் சிறந்த முறையில் உதவ வழிவகுக்கும்.

## ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு

### கிடைக்கக்கூடிய சுகாதாரப் பராமரிப்பு

உங்களுக்குத் தேவைப்படும்போது சுகாதாரப் பராமரிப்பு இன்னும் கிடைக்கிறது.

உங்களுக்கு கடுமையாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தால் மற்றும் அவசர சிகிச்சை தேவைப்பட்டால், உங்களுக்கு அருகிலுள்ள அவசர சிகிச்சைப் பிரிவுக்குச் செல்லுங்கள் அல்லது **111 ஐ அழைக்கவும்.**

அவசரநிலை இல்லையா? நீங்கள் 0800 611 116 என்ற எண்ணில் ஹெல்த்லைனை அழைக்கலாம். சுகாதார நிபுணர்களிடமிருந்து இலவச சுகாதார ஆலோசனைகளைப் பெற ஹெல்த்லைன் வாரத்தில் 7 நாட்களும், 24 மணிநேரமும் கிடைக்கிறது. உங்களுக்குத் தேவைப்பட்டால், மதிப்பீடு மற்றும் சிகிச்சைக்கு எங்கு, எப்போது செல்ல வேண்டும் என்பது இந்த ஆலோசனையில் அடங்கும்.

ஒரு பொது மருத்துவரிடம் சேர்ந்திருக்கிறீர்களா அல்லது வழக்கமான சுகாதார வழங்குநர் இருக்கிறாரா? ஒரு சந்திப்பு முன்பதிவை மேற்கொள்ள உங்கள் பொது மருத்துவரையோ அல்லது சுகாதாரப் பராமரிப்பு வழங்குநரையோ அழையுங்கள். என்ன பிரச்சனை என்பதை விளக்கினால், அவசர சந்திப்பு நேரம் கிடைக்கக்கூடும்.

நீங்கள் பதிவு செய்திருக்கவில்லை என்றால் அல்லது உங்கள் வழக்கமான வழங்குநர் விரைவில் கிடைக்கவில்லை என்றால், உங்கள் உள்ளூர் அவசர சிகிச்சை மையத்திற்குச்

செல்லலாம். உங்களுக்கு ஒரு சந்திப்பு முன்பதிவு தேவையில்லை, ஆனால் நீங்கள் காத்திருக்க வேண்டியிருக்கும்.

www.healthpoint.co.nz/gps-accident-urgent-medical-care/. என்ற வலைதளத்தில் அவசர சிகிச்சை மையத்தைக் கண்டறியவும்.

## பரிந்துரைக்கப்பட்ட மருந்து

உங்களிடம் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள் தீர்ந்து போயிருந்தாலோ அல்லது அவற்றைப் அணுக முடியாமலோ இருந்தால், ஒரு புதிய மருந்துச் சீட்டைப் பெறுவதற்கு ஒரு மருத்துவரைப் பார்ப்பதே உங்களுக்குச் சிறந்த வழி ஆகும்.

உங்களால் ஒரு மருத்துவரைப் பார்க்க முடியவில்லை என்றால், மருந்தகங்கள் உதவக்கூடும். மருந்தாளுநர்கள் உங்களுக்கு ஒரு மூன்று நாள் அவசர விநியோகத்தை வழங்கலாம். இதற்கு அரசாங்கத்திடமிருந்து நிதி இல்லாததால் இது விலை உயர்ந்ததாக இருக்கலாம்.

மருந்தகத்தைக் கண்டறியவும் www.healthpoint.co.nz/pharmacy/.

## இயங்கும் மருத்துவ உபகரணங்கள்

மருத்துவ உபகரணங்கள், மருந்துகள் அல்லது உயிர்காக்கும் சாதனங்களுக்கு மின்சாரம் தேவைப்பட்டால் ஆனால் உங்களிடம் காப்புப்பிரதி ஜெனரேட்டர் இல்லையென்றால், உங்கள் மின்சார நிறுவனத்தைத் தொடர்புகொண்டு உங்கள் நிலைமையை விளக்குங்கள். இது வேலை செய்யவில்லை என்றால், உபகரண வழங்குநரைத் தொடர்பு கொள்ளவும். இது வேலை செய்யவில்லை என்றால், 111 ஐ அழைக்கவும்.

## நல்வாழ்வு

ஒரு அவசரநிலை சூழ்நிலையில் பதட்டம் என்பது மிக பொதுவானதாகும். இது ஒரு மன அழுத்த சூழ்நிலைக்கு ஒரு சாதாரண எதிர்வினை ஆகும். மக்களிடம் பேசுவதும் மற்றவர்களுக்கு உதவுவதும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

பதட்டம், தவிப்பு அல்லது மன நலம் தொடர்பான உதவிக்கு, 1737 என்ற எண்ணில் அழைக்கவும் அல்லது Need to Talk? என்று குறுஞ்செய்தி அனுப்பவும். நீங்கள் ஒரு பயிற்சி பெற்ற ஆலோசகரிடம் 24 மணிநேரமும், வாரத்தில் 7 நாட்களும் இலவசமாகப் பேசலாம்.

இலவச நேரடி மனநல ஆதரவுக்கு, www.wellbeingsupport.health.nz ஐப் பார்வையிடவும்.

சவாலான நேரங்களில் போதுமான தூக்கம் பெற முயற்சிப்பது முக்கியம். தூக்க உதவிக்குறிப்புகளை இங்கே காணலாம்: www.healthnavigator.org.nz/sleep-tips/.

அவசரநிலையால் குழந்தைகள் பாதிக்கப்பட்டிருந்தால், என்ன நடக்கிறது என்பது பற்றி அவர்களிடம் பேசுங்கள். இயற்கைப் பேரிடரைச் சமாளிக்க குழந்தைகளுக்கு உதவுவதற்கான உதவிக்குறிப்புகளைக் கண்டறியவும்: www.kidshealth.org.nz/coping-natural-disaster.

மேலும் மனநல ஆதாரங்களைக் கண்டறியவும் www.getready.govt.nz/mental-wellbeing/.

### கிராமப்புற ஆதரவு

நீங்கள் ஒரு உழவர் அல்லது விவசாயி என்றால், கிராமப்புற ஆதரவு அறக்கட்டளை மூலம் ஆதரவு கிடைக்கிறது.

கிராமப்புற ஆதரவு அறக்கட்டளையை 0800 Rural Help (0800 787 254) என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும் அல்லது www.rural-support.org.nz ஐப் பார்வையிடவும்.

## ஊனமுற்றோருக்கான ஆதரவு

### பொது ஆதரவு

உங்களுக்கு உடனடி உதவி தேவைப்பட்டால், 111 ஐ அழைக்கவும். உங்களுக்கு கேட்பதிலோ தொலைபேசியில் பேசுவதிலோ சிக்கல் இருப்பின், www.police.govt.nz/111-txt என்ற முகவரியில் 111 TXT சேவைக்கு பதிவு செய்யலாம்.

சுகாதார உதவிக்கு, நியூசிலாந்து டெலிஹெல்த் சர்வீசஸ், Whakarongorau Aotearoa ஐத் தொடர்பு கொள்ளவும். 0800 111 213

என்ற எண்ணை அழைக்கவும் அல்லது 8988 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்பவும்.

உங்களுக்கு கேட்பதிலோ தொலைபேசியில் பேசுவதிலோ சிக்கல் இருப்பின், நியூசிலாந்து ரிலே சேவையைப் பயன்படுத்தி மற்றவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். www.nzrelay.co.nz இல் சேவையைப் பற்றி அறியவும்.

### மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் நாய்களுடன் வெளியேற்றம்

நீங்கள் ஒரு சிவில் பாதுகாப்பு மையத்திற்குச் சென்று ஒரு உதவி நாயை வைத்திருக்க வேண்டும் என்றால், உங்கள் நாயை உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். உங்களுக்கும் உங்கள் நாய்க்கும் தேவையான அத்தியாவசியப் பொருட்களை எடுத்துக் கொள்ளுங்கள். சாதனங்கள், மருந்துகள், சூடான ஆடைகள் மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள் உட்பட.

### இயங்கும் மருத்துவ உபகரணங்கள்

மருத்துவ உபகரணங்கள், மருந்துகள் அல்லது உயிர்காக்கும் சாதனங்களுக்கு மின்சாரம் தேவைப்பட்டால், உங்களிடம் காப்புப்பிரதி ஜெனரேட்டர் இல்லையென்றால், முதலில் உங்கள் மின்சார நிறுவனத்தைத் தொடர்புகொண்டு உங்கள் நிலைமையை விளக்குங்கள். இது வேலை செய்யவில்லை என்றால், உபகரணங்கள் வழங்குநரைத் தொடர்பு கொள்ளவும். இது வேலை செய்யவில்லை என்றால், 111 ஐ அழைக்கவும்.

## *Whānau Māori* க்கான ஆதரவு

### பொது ஆதரவு

சிவில் பாதுகாப்பு அவசரநிலை மேலாண்மை குழுக்கள் Te Puni Kōkiri யுடன் கூட்டு சேர்ந்துள்ளன. அவர்கள் iwi, hapū மற்றும் Māori அமைப்புகளுடன் இணைந்து மாவோரியில்

பாதிக்கப்பட்டவர்கள் ஆதரிக்கப்படுவதை உறுதி செய்வார்கள்.

## பசிபிக் மக்களுக்கான ஆதரவு

### பொது ஆதரவு மற்றும் தகவல்

சிவில் பாதுகாப்பு அவசரநிலை மேலாண்மை குழுக்கள் பசிபிக் மக்களுக்கான அமைச்சகத்துடன் இணைந்து செயல்படுகின்றன. பாதிக்கப்பட்ட பசிபிக் மக்களுக்கு ஆதரவு கிடைப்பதை உறுதி செய்வதற்காக அவர்கள் பசிபிக் தலைவர்கள், சமூகங்கள் மற்றும் பசிபிக் சமூக அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுவார்கள்.

பசிபிக் மக்களுக்கான அவசரகால பதில் தகவல்களை பசிபிக் மக்கள் அமைச்சகத்தின் வலைத்தளம் மற்றும் பேஸ்புக் பக்கத்தில் காணலாம்.

- வலைத்தளம்: www.mpp.govt.nz/emergency-response
- பேஸ்புக்: @MinistryforPacificPeoples

## இன சமூகங்களுக்கான ஆதரவு

### பொது ஆதரவு மற்றும் தகவல்

சிவில் பாதுகாப்பு அவசரநிலை மேலாண்மை குழுக்கள் இன சமூகங்களுக்கான அமைச்சகத்துடன் இணைந்து செயல்படுகின்றன. பாதிக்கப்பட்ட இன சமூக மக்களுக்கு ஆதரவு கிடைப்பதை உறுதி செய்வதற்காக அவர்கள் இன சமூக தலைவர்கள், சமூகங்கள் மற்றும் இன சமூக அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுவார்கள்.

இன சமூகங்களுக்கான அமைச்சகத்தின் வலைத்தளம் மற்றும் பேஸ்புக் பக்கத்தில் பல மொழிகளில் அவசரகால பதில் தகவல்களைக் கண்டறியவும்.

- வலைத்தளம்: www.ethniccommunities.govt.nz
- பேஸ்புக்: @ethniccommunities.govt.nz

# வெளிநாட்டினர்

## வெளிநாட்டினருக்கான ஆதரவு

நீங்கள் நியூசிலாந்து குடிமகன் இல்லையென்றால், உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், இந்தப் பக்கத்தில் உள்ள ஆதரவைப் பயன்படுத்தலாம். நீங்கள் உங்கள் தூதரகம் அல்லது உயர் ஆணையத்தை தொடர்பு கொள்ளலாம்.

உங்கள் தூதரகம் அல்லது உயர் ஆணையத்தைக் கண்டறியவும் www.mfat.govt.nz/en/embassies/.

நீங்கள் நியூசிலாந்திற்கு வருகை தருபவராக இருந்து, உங்கள் பயணம் தடைபட்டிருந்தால், உங்கள் பயணக் காப்பீட்டாளரைத் தொடர்பு கொள்ளவும்.

## காலாவதியான/காலாவதியாகும் விசா

விசாக்கள் தொடர்பான உதவிக்கு நியூசிலாந்து குடியேற்றத்தைத் தொடர்பு கொள்ளவும்: www.immigration.govt.nz/about-us/contact

# விலங்கு நல்வாழ்வு

## விலங்குகளைப் பாதுகாத்தல்

உங்கள் விலங்குகள் உங்கள் பொறுப்பு. அவசர காலங்களில் நீங்கள் அவைகளை கவனித்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் வெளியேற வேண்டியிருந்தால், அது பாதுகாப்பானதாக இருந்தால் உங்கள் செல்லப்பிராணிகளை உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்.

உங்கள் விலங்குகளை தனியே விட்டுச் செல்ல வேண்டுமென்றால், அவைகள் பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட இடத்தில் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

அவசரகாலத்தில் உங்கள் விலங்குகளை எவ்வாறு பராமரிப்பது என்பது பற்றி அறிக www.mpi.govt.nz/animals-in-emergencies/.

### விலங்கு நல்வாழ்வு அச்சங்கள்

ஏதேனும் விலங்கு நலக் கவலைகளைப் பதிவு செய்ய உங்கள் சிவில் பாதுகாப்பு அவசரநிலை மேலாண்மைக் குழுவைத் தொடர்பு கொள்ளவும். எந்தவொரு கவலைகளையும் முதன்மைத் தொழில்களுக்கான அமைச்சகம் பின்தொடரும்.

உங்கள் சிவில் பாதுகாப்பு அவசரநிலை மேலாண்மைக் குழுவை இங்கே கண்டறியவும் www.civildefence.govt.nz/find-your-civil-defence-group/.

### நோய்வாய்ப்பட்ட மற்றும் காயமடைந்த விலங்குகள்

உங்கள் விலங்குகள் நோய்வாய்ப்பட்டாலோ அல்லது காயமடைந்தாலோ, உங்கள் கால்நடை மருத்துவமனையைத் தொடர்பு கொள்ளவும்.

## காப்பீடு

### சொத்து சேதம்

உங்கள் வீடு, வாகனம் அல்லது பொருட்கள் சேதமடைந்திருந்தால், எதையும் அகற்றுவதற்கு அல்லது பழுதுபார்ப்பதற்கு முன் புகைப்படங்கள் எடுக்கவும்.

சேதத்தை உங்கள் காப்பீட்டு நிறுவனத்திற்கு கூடிய விரைவில் தெரிவிக்கவும். அடுத்து நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை உங்கள் காப்பீட்டு நிறுவனம் உங்களுக்குத் தெரிவிக்கும்.

உங்கள் வீட்டை சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் மாற்ற அவசர வேலை செய்ய வேண்டியிருந்தால், நீங்கள் செய்யும் வேலையைப் பதிவு செய்யுங்கள். முன் மற்றும் பின் புகைப்படங்களை எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் செலுத்தும் பில்களின் நகல்களை வைத்திருங்கள்.

உங்களிடம் வீட்டு காப்பீடு இல்லை ஆனால் வீட்டு பொருட்கள் காப்பீடு இருக்கிறது எனில் உங்கள் காப்பீட்டு நிறுவனத்திடம் பேசி எவற்றிற்கெல்லாம் காப்பீடு கிடைக்கும் என்று அறிந்துகொள்ளுங்கள். நிறைய

புகைப்படங்களை எடுத்து, நீங்கள் வெளியே எறியும் எதையும் பதிவு செய்து கொள்ளுங்கள்.

### ஒரு காப்பீட்டு கோரிக்கையைச் செய்தல்

இயற்கை ஆபத்துகளால் ஏற்படும் சேதங்களுக்கு NHCover கோரிக்கை வைக்க உங்கள் காப்பீட்டாளரைத் தொடர்பு கொள்ளவும்.

வீட்டு உரிமையாளர்களுக்கான ஒற்றைத் தொடர்பு புள்ளியை ஏற்படுத்த, இயற்கை ஆபத்து ஆணையம் Toka Tū Ake காப்பீட்டாளர்களுடன் கூட்டு சேர்ந்துள்ளது.

உங்கள் காப்பீட்டாளர் முழு கோரிக்கையையும் மதிப்பீடு செய்து, நிர்வகித்து, தீர்வு காண்பார். NHCover உட்பட

### காப்பீட்டு கோரிக்கைகளுக்கு உதவி

நியூசிலாந்து உரிமைகோரல் தீர்வு சேவை ஒரு இலவச சேவையாகும். உங்கள் வீட்டுக் காப்பீட்டு பாலிசி அல்லது காப்பீட்டு கோரிக்கை செயல்முறை குறித்து உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் அல்லது கவலைகள் இருந்தால் இது உங்களுக்கு உதவும்.

உங்கள் கோரிக்கை மற்றும் சேவை உங்களுக்கு எவ்வாறு உதவும் என்பது பற்றி யாரிடமாவது பேச, 0508 624 327 என்ற எண்ணை அழைக்கவும், மின்னஞ்சல் செய்யவும். contact@nzcrs.govt.nz அல்லது www.nzcrs.govt.nz ஐப் பார்வையிடவும்.

### NHCover

NHCover என்பது இயற்கை பேரிடர் காப்பீடு ஆகும். உங்கள் வீடு அல்லது நிலத்திற்கு தீ காப்பீடு உட்பட தனியார் குடியிருப்பு காப்பீட்டுக் பாலிசி இருந்தால், உங்களிடம் ஏற்கனவே NHCover உள்ளது. சில சேதமடைந்த நிலங்களுக்கு NHCover இல்லாமல் இருக்கலாம்.

NHCover உங்களுக்கு பின்வரும் இழப்பு அல்லது சேதத்திற்கு எதிராக காப்பீடு செய்கிறது:

- பூகம்பங்கள்,
- இயற்கை நிலச்சரிவுகள்,

- எரிமலை வெடிப்புகள்,
- நீர்வெப்ப செயல்பாடு,
- சுனாமி, மற்றும்
- இந்த இயற்கை ஆபத்துகளால் ஏற்படும் தீ.

இது புயல்கள் அல்லது வெள்ளத்தால் ஏற்படும் சேதத்திற்கும் உங்கள் நிலத்தை காப்பீடு செய்கிறது.

NHCover வீட்டுடைமையாளர்களுக்கான வழிகாட்டியைப் படியுங்கள் மேலும் அறிய www.naturalhazards.govt.nz/our-publications/guide-to-natural-hazards-cover/.

## குத்தகைதாரர்கள் மற்றும் வீட்டு உரிமையாளர்கள்

### பொது தகவல்

நீங்கள் குடியிருப்பவர் அல்லது வாடகைக்கு தந்துள்ள நிலத்தின் உரிமையாளர் என்றால் உங்கள் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய விவரங்களை www.tenancy.govt.nz என்ற வலைத்தளத்திலோ அல்லது 0800 TENANCY (0800 836 262) என்ற எண்ணை அழைத்தோ பெறலாம்.

## பள்ளிகள் மற்றும் ஆரம்பகால குழந்தைப்பருவ கல்வி மையங்கள்

### பொது தகவல்

புதுப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு உங்கள் பள்ளி அல்லது ஆரம்பகால குழந்தைப்பருவ மையத்தைத் தொடர்புகொண்டு அவை மூடப்பட்டுள்ளதா மேலும் எப்போது மீண்டும் திறக்கத் திட்டமிடுகின்றன என்பதைப் அறிந்துகொள்ளவும்.